பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை 21.10.2025 கதிர் 345

## இது ரகசியம் அல்ல!

அரச நிறுவனங்களில் பெருமளவில் நிதி மோசடி செய்த அதிகாரிகளுக்கான ஆப்பு நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. இதுவரைக்கும் இப்படி மோசடி ☞ 2

# ஆளும்தரப்பின் 159 பேருக்கும் அடுத்த ஆட்சியில் சிறைதான்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

அடுத்த ஆளும்தரப்பின் காலத்தில் - 2029இல் - தற்போதைய ஆளும்தரப்பின் 159 உறுப்பினர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று எச்சரித்தார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில.

நாடாளுமன்ற உறுப்பினர் கொடுப்பனவுகளை ஆளும்தரப்பு கையாளும் விதத்தை அவர் நேற்றுக் கடுமையாக விமர்சித்தார்,



உத்தியோகபூர்வநோக்கங்களுக்காக வழங்கப்படும் பொது நிதியை அரசியல் கட்சி நிதிகளுக்கு சட்டப்பூர்வமாக நன்கொடையாக வழங்கமுடியாது என்று அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கொடுப்பனவுகளை கட்சி கருவூலத்திற்கு பங்களிப்பதைத் தடை செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ☞ 2

## கடும் மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை மூன்று பேர் இறப்பு

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழையால் ஏற்பட்ட இடர்களில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என்று பேரிடர் மேலாண்மை மையம் (DMC) தெரிவித்துள்ளது.

பேராதனை, ருவன்வெல்ல மற்றும் தம்புத்தேகம ஆகிய இடங்களில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அனுராதபுரம், தம்புத்தேகமவில், சனிக்கிழமை பெய்த கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஒருவர் இறந்தார்.

பேராதனையில், 72 வயதுடைய ஒருவர் நிலச்சரிவில் புதைந்து இறந்தார். கால்வாய் அருகே நடந்து சென்றபோது, அருகிலுள்ள மண்மேடு சரிந்து விழுந்ததில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இதற்கிடையில், ருவன்வெல்லவில், கனமழையின் போது நடைபாதை பாலத்தைப் பயன்படுத்தி கால்வாயைக் கடக்க முயன்ற 54 வயதுடைய ஒருவர் கால்வாயில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார். ☞ 2

## பல்கலை ஆசிரியர் சங்கங்களுடன் அநுரகுமார நேற்று நேரடிப் பேச்சு

இலங்கையின் உயர்கல்வித் துறையைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு (ய்ஷீவீபு) உடன் அரசுத் தலைவர் அநுரகுமார நேற்றுக் காலை அரசுத் தலைவர் செயலகத்தில் சந்தித்தார்.

கூட்டத்தின் போது, பட்டப்படிப்புகளை முடிப்பதில் காணப்படும் தாமதம், கல்வியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சமீபத்திய ஆண்டுகளில் பல்கலைக்கழக அமைப்பிற்குள் ஏற்படும் இடையூறுகள் குறித்து ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

கல்வித் தரத்தைப் பேணுகையில், நிலுவையில் உள்ள பட்டப்படிப்புகளை முடிப்பதை விரைவுபடுத்துவதற்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு அரசுத் தலைவர் அறிவுறுத்தினார். இந்தத் திட்டத்தை செயல்படுத்தவும், பல்கலைக்கழகங்களுக்குள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் ஆளும்தரப்பு தேவையான ஆதரவை வழங்கும் என்று அவர் உறுதியளித்தார்.

உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் தகுதிவாய்ந்த கல்வி ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதிலும் தக்கவைத்துக்கொள்வதிலும் உள்ள சவால்களை நிவர்த்தி செய்வது குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் ஹரிணி, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக, தொழிலாளர் அமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் துணை அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ☞ 2

## பொலிஸார் தம் அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தக் கூடாது

### பொலிஸ் மா அதிபர் இடித்துரைப்பு

நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையிலும், பொதுமக்களின் நல்வாழ்வுக்கு சேவை செய்யும் வகையிலும், பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அவர்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்று காவல் மா அதிபர் (ஜஜிபி) பிரியந்த வீரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் (பிசிஐடி) தொடக்க விழாவில் நேற்று உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு கொலைத் தண்டனை வழங்கவேண்டும்

### முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கருத்து

பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு குறுகிய கால அடிப்படையில் கொலைத் தண்டனை அல்லது அதனுடன் ஒப்பிடக்கூடிய மாற்றீட்டை அறிமுகப்படுத்துவது குறித்து ஆளும்தரப்பு பரிசீலிக்கவேண்டும் என்று முன்னாள் மனித உரிமைகள் ஆணையர் பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா பரிந்துரைத்துள்ளார்.

சிங்கப்பூர், மியான்மர், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, ஜப்பான், வியட்நாம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் போதைப்பொருள் வர்த்தகத்தின் உச்சத்தில் அதனைத் தடுப்பதற்காக தற்காலிகமாக கொலைத்தண்டனையை அமல்படுத்தியுள்ள சர்வதேச முன்னுதாரணங்களை மகாநாமஹேவா மேற்கோள் காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (ஊணவீபு) ரத்து செய்வதற்கான ஆளும்தரப்பின் சமீபத்திய முடிவைத் தொடர்ந்து அதனால் ஏற்படக்கூடிய சாத்தியமான சட்ட இடைவெளி குறித்தும் அவர் மேலும் எச்சரித்தார். தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இதன் மூலம் விடுவிக்கப்படலாம், இது குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

இதை நிவர்த்தி செய்ய, பயங்கரவாதத் தடைச் சட்டம் அதிகாரப்பூர்வமாக ரத்து செய்யப்படுவதற்கு முன்பு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்தும் புதிய சட்டத்தை இயற்ற வேண்டியதன் அவசரத் தேவையை மகாநாமஹேவா வலியுறுத்தினார்.

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளுக்கான விரைவான நீதித்துறை செயல்முறையை நிறுவுவதற்கும், விசாரணைகளை விரைவுபடுத்த தடயவியல் மற்றும் நீதித்துறை வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கும் ☞ 2

### 25 சதவீதமான பணியாளர்கள் ஊழல்வாதிகள் என்ற

## மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கருத்துக்கு தொழிற்சங்கம் எதிர்ப்பு

மதுவரித் திணைக்களத்தில் உள்ள கால்வாசிப் பேர் மோசடிக்காரர்கள் என்று அதன் ஆணையாளர் நாயகம் பிரேமரத்ன வெளியிட்ட தகவலுக்கு மதுவரி பணியாளர் தொழிற்சங்கங்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

மதுவரிப் பணியாளர்களில் 20-30 சதவீத அதிகாரிகள் ஊழல்வாதிகள் என்று ஆணையாளர் நாயகம் எவ்வாறு கூற முடியும் என்றும், அப்படியான ஊழல்வாதிகள் இருந்தால் துறை அதன் வருவாய் இலக்கில் 107 சதவீதத்தைஎப்படி அடைந்தது எனவும் தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஆணையாளர் நாயகத்தின் கருத்து ஆதாரமற்றது என்றும், அரச நிர்வாகம் மற்றும் வரிவிதிப்பு குறித்த புரிதலின்மையை இது பிரதிபலிப்பதாகவும், நாடு முழுவதும் உள்ள மதுவரிப் பணியாளர்களுக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆணையாளர் நாயகத்தை இன்று சந்தித்து அவரது அறிக்கையைத் தெளிவுபடுத்தக் கேட்கப் போகிறார்கள் என்றும் அல்லது அவர் தனது கூற்றைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன. ஆணையாளர் தனது கருத்தைத் திருத்தாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றும் அவை எச்சரித்துள்ளன. ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

செய்வதை, உருளித்தனம் செய்வதை தமது கெட்டித்தனம், திறமை என்று நினைத்துக் கொண்டிருந்த முன்னாள் இன்னாள் அதிகாரிகள் அனைவருக்கும் விரைவில் முட்படுக்கைதான். பழைய கணக்கு வழக்கு விவகாரங்களுக்காக எப்போது விசாரணை வரும் எப்போது கைது செய்யப்படுவோம் என்ற பதற்றத்துடனேயே அவர்களின் வர்நாளைக் கடத்த வேண்டியிருக்கும்.

அறத்துக் காரணம் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு (கோப் -COPE) மற்றும் பொது கணக்குகள் தொடர்பானநாடாளுமன்றக்குழுவின்(கோப்பா-COPA) அறிக்கைகளில் மோசடிகளாக இனங்காணப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப் பானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் பரிந்துரைகளை குற்றப்புலனாய்வுத் துறை மற்றும் லஞ்ச ஒழிப்பு ஆணையத்திற்கு அனுப்புவதற்கான அதிகாரத்தை பொலிஸ் மா அதிபருக்கு வழங்கும் வகையில் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் திருத்தம் செய்வதற்கு அதற்கான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமை யில் அண்மையில் கூடிய நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் குழுவில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது. இதுவரைக்கும் கோப் மற்றும் கோப்பா குழுக்களால் கண்டறி யப்பட்ட முறைகேடுகள் மற்றும் மோசடிகள் குறித்து அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எதுவும் இந்தக் குழுக்களுக்கு இருந்ததில்லை. அதிகாரிகளை இந்தக் குழுக்களின் முன்பாக அழைத்து விசாரிக்கவும் விளக்கம் கேட்கவும் வையவும் மட்டுமே இதுவரையில் இந்தக் குழுக்கள் அதிகாரம் பெற்றிருந்தன. இப்போது விசாரணையில் குற்றம் எனக் கண்டறியப்பட்டாலோ, அதிகாரிகளின் விளங்கங்களில்திருப்தியின்மை இருந்தாலோ அது குறித்து முறையான குற்றப் புலனாய்வை நடத்தி தேவையானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும்.

இது தொடர்பான நிலையியற் கட்டளைத் திருத்த வரைவை சபாநாயகர் நாளை நாடாளுமன்றத்தில் முன்வைப்பார். அதன் பின்னர், அது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு, நாடாளுமன்றத்தில்பரிசீலிக்கப்பட்டுநிறைவேற் றப்படும். ஆளும்தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால் இந்த மாற்றம் இலகுவில் நிறைவேறிவிடும். அதனால், அதிகாரிகளுக்கு 'ஆப்பு' நெருங்கிக் கொண்டிருக்கிறது.

................................

கோதட்டுவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய காவலர் ஒருவர் தனது வேலையைத் தூக்கி எறிந்துவிட்டு ஓடிவிட்டார் என்றுகூறப்படுகின்றது. எதற்காக என்கிறீர்கள்? கடமை நேரத்தில் அலைபேசியில் காணொளி பார்ப்பதை உயரதிகாரி கண்டித்தார் என்கிற கோபத்தில் அவர் இப்படி நடந்துகொண்டாராம். போகிறபோது அவர் சும்மா போகவில்லை. தன்னைக் கண்டித்த பொறுப்பதிகாரியை சகட்டுமேனிக்குத் திட்டித் தீர்த்துவிட்டுத்தான் போயிருக்கிறாராம்.

இன்றைய தலைமுறையினரில் சிலரின் அலைபேசி அடிமைத்தனத்திற்கும் பொறுப்பற்ற தனத்திற்கும் இதுவொரு சிறந்த உதாரணம். இப்படி உயரதிகாரியைத் திட்டிவிட்டு வேலையையும் தூக்கி எறிந்துவிட்டுச் சென்றவர் புதிதாக பணியில் இணைந்த காவலர் (கொன்ஸ்டபிள்) ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் தொலைபேசி அழைப்பு ஒழுங்குபடுத்துனராக (ஆப்பரேட்டர்) அவருக்குப் பணி ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் அவர் தனது அலைபேசியில் (மொபைல்) காணொளி (வீடியோ) பார்த்துக் கொண்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் நிலையக் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரியும் பெண் போலீஸ் அதிகாரி ஒருவர், இவரது இந்தச் செய்கை பணியில் உள்ள மற்ற பொலீஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகக் கூறி, காவல் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார். இதையடுத்து உயரதிகாரி அந்தப் புதிய காவலரை அழைத்துத் திட்டியுள்ளார். அதனால் பதிலுக்கு அவரைத் திட்டிவிட்டு வேலையையும் தூக்கி எறிந்துவிட்டு அவர் போய்விட்டாராம். காவல் நிலையத்தில் உள்ள காவலர்களின் ஓய்வு அறைக்குச் சென்று தனது சீருடை, தொப்பி, பொலிஸ் அடையாள அட்டை என்று எல்லாவற்றையும் அங்கேயே ஒழுங்காக வைத்துவிட்டு ஆள் வெளியேறிவிட்டார் என்கிறார்கள் மற்றைய பொலிஸார். எல்லாம் கலிகாலம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசேகரவின் முன்மொழிவு தொடர்பில் பதிலளித்த கம்மன்பில, ஒருவரின் சம்பளத்தை செலவிடுவதற்கும் பொதுக்கொடுப்பனவுகளை தவறாகப் பயன்படுத்துவதற்கும் இடையே தெளிவான வேறுபாடு இருப்பதாகக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட வருமானத்தை அவர்கள் விரும்பியபடி பயன்படுத்த சுதந்திரமாக இருந்தாலும், அலுவலகங்கள், எரிபொருள், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து போன்ற கொடுப்பனவுகளை பொது நோக்கத்திற்காக மட்டுமே செலவிடவேண்டும் என்று அவர் விளக்கினார். வாடகை, மின்சாரம் அல்லது உபகரணங்கள் போன்ற அலுவலகத்தை பராமரிக்க வழங்கப்படும் நிதியை ஒரு கட்சியிடம் ஒப்படைக்க முடியாது. அவ்வாறு செய்வது பொதுப் பணத்தை தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம் என்று அவர் கூறினார்.

இத்தகைய செயல்கள் பொதுச் சொத்துக்களை துஸ்பிரயோகம் செய்வதற்குச் சமம், இது பிணையில் வெளிவர முடியாத குற்றமாகும் என்று கம்மன்பில எச்சரித்தார். 'இப்படிப் பொது நிதியைத் துஸ்பிரயோகம் செய்யும் 159 ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு கடுமையான குற்றத்தைச் செய்கிறார்கள். அடுத்த ஆளும்தரப்பின் கீழ், வெலிக்கடை சிறைச்சாலையில் ஒரு முழு விடுதி முழுவதும் அவர்களுக்காக ஒதுக்கப்படவேண்டும்,' என்று அவர் தெரிவித்தார்.

## போதைப் பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அழைப்பு விடுத்தார். அத்தகைய நடவடிக்கைகள் இல்லாமல், குற்றவாளிகள் பிணை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, தடுப்புக் காவல் காலம் முடிந்ததும் நாட்டை விட்டு வெளியேற நேரிடும் என்று அவர் எச்சரித்தார்.

## பொலிஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2025 ஆம் ஆண்டின் 05 ஆம் எண் குற்றப் புலனாய்வுச் சட்டத்தின் விதிகள் குறித்து கருத்து தெரிவித்த ஐஜிபி, தற்போதைய சட்ட அமைப்புகளில் இதுபோன்ற அதிகாரம் கொண்ட சட்டம் ஒருபோதும் இருந்ததில்லை என்று கூறினார்.

'காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகபட்ச அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, ஆனால் அந்த அதிகாரம் துஸ்பிரயோகம் செய்யப்படக்கூடாது. இந்த அதிகாரம் பொதுமக்களின் நலனுக்காகவும், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் திறப்பு விழா காவல்துறை தலைமையகத்தின் பழைய கட்டடத்தில் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் நடைபெற்றது. மூத்த பிரதிக் காவல் மா அதிபர் (றீம்ஹுறூ) அசங்க கரவிட்ட, தேசிய காவல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, மூன்று ஆண்டு காலத்திற்கு இந்தப் பிரிவின் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# குற்றவியல் புலனாய்வுப் பிரிவு நேற்றுப் புதிதாக திறந்துவைப்பு

2025ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க குற்றவியல் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட குற்றவியல் புலனாய்வுப் பிரிவை (PCID) இலங்கை காவல்துறை நேற்று அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தது.

காவல்துறை தலைமையகத்தின் பழைய கட்டடத்தில் அமைந்துள்ள இந்தப் பிரிவு, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் தலைமையில் திறக்கப்பட்டது.

சட்டவிரோத வழிகளில் பெறப்பட்ட சொத்துக்கள், நிதி தொடர்பில் விசாரிப்பதற்காக இந்த குற்றவியல் புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பிரிவை 34 அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கவும், குற்றவியல் மற்றும் கணக்கில் வராத சொத்துக்களை கையகப்படுத்துவதற்காக விசாரிக்கவும் சட்டம் பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கிறது. கையகப்படுத்தப்பட்ட சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் நீதிமன்றத்தால் இந்தப் பிரிவால் வழக்குகளையும் தாக்கல் செய்யமுடியும்.

இந்தப் பிரிவு பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் என்றும், சந்தேகத்திற்கிடமான சொத்துக்களை 30 நாட்கள் வரை முடக்கவோ அல்லது பறிமுதல் செய்யவோ இதற்கு அதிகாரம் உள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சட்டம் கணக்காய்வாளர் நாயகத்திற்குப் பரந்த மேற்பார்வை அதிகாரங்களை வழங்குகிறது - தணிக்கை முடிவுகளை லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்திற்கு (CIABOC) நேரடியாகத் தெரிவிக்க அனுமதிக்கிறது - மேலும் சட்டம் பின்னோக்கிச் செல்லும் வகையில் பொருந்தும் என்றும், கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உதவுகிறது என்றும் சட்ட ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## கடும் மழை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாவட்டங்களில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்டோர் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலை ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவிற்கு அதன் தலைவர் பேராசிரியர் வீரதுங்க மற்றும் செயலாளர் சாருதத்த இளங்கசிங்க ஆகியோர் தலைமை தாங்கினர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து மாவட்டங்களிலும் இராணுவம்

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைகளைக் கருத்திற்கொண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் இராணு வக் குழுக்களை அனுப்பிவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் மெதகொட தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த் தம் காரணமாகப் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், சியம்பலாண்டுவ - கொங்கஸ்பிட்டிய வீதியின் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதால் அதனூடான போக்குவரத்துநடவடிக்கைகள்பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் வாகன சாரதிகள் அவதா னத்துடன் செயற்படுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

# கைவிலங்குடன் தப்பிய சந்தேகநபர் மாட்டினார்

கைவிலங்குடன் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர் ஒருவர் வத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் குற்றம் தொடர்பில் பிடியாணை உத் தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் வத்தேகம பொலிஸாரால் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் கைவிலங்குடன் பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாக இருந்தவர்.

வத்தேகம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு நாள் சோதனை நடவடிக்கையில் தப்பிச் சென்ற சந்தேகநபர் கண்டி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர். சந்தேகநபர் தனது கைகளில் இருந்த கைவிலங்கைத் தனது நண்பனின் உதவியுடன் நீக்கியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபருக்கு உதவி செய்த குற்றச்சாட்டில் அவரது நண்பனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.




# ஐஸ்ஸுடன் கைதான கான்ஸ்டபிளுக்கு மறியல்

கொழும்பு-புதுக்கடை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட, பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கசுன் தயாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது நபர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியைப் பலாத்காரமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட 26 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் புதுக்கடை பிரதேசத்தில் 11 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் வாழைத்தோட்டம் பொலிஸா ரால் அண்மையில் கைது செய்யப்பட்டார். இவர் நேற்று திங்கட்கிழமை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் இளைஞர் வெட்டிப் படுகொலை

கிளிநொச்சி மாவட்டம், ஈச்சங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். முற்பகை காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் கௌரிராஜன் கஜன் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்கந்தபுரத்தில் உள்ளது ஈச்சங்குளம். அதே இடத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார். திருமணமான இவருக்கு ஒரு பெண் குழந்தை இருக்கின்றது.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வெள்ளத்தை எதிர்கொள்ளும் தயார் நிலையில் நாம் எங்கே?

கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கை முழுவதும் நீண்ட வறட்சியின் துன்பத்தைச் சந்தித்தோம். விவசாயம் மந்தமடைந்து, நீர்த்தேக்கங்கள் வற்றிப் போனது. வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் மக்கள் குடிநீருக்கே தவித்தனர். அத்தகைய நிலையைத் தொடர்ந்து, இந்த ஆண்டில் பெரும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு நிகழும் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். இயற்கையின் சுழற்சி அதே போலவே தொடர்கிறது – ஆனால் அதனை எதிர்கொள்ளும் எங்கள் தயார் நிலை எவ்வாறு உள்ளது என்பதே இன்றைய மிக முக்கியமான கேள்வி.

### அபாய மண்டலம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் – குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகள் – மழை அதிகமாகப் பெய்யும் சமயங்களில் பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடங்களாகும். கடந்த கால அனுபவங்களை எடுத்துக் கொண்டால், சற்று அதிக மழை பெய்தாலே சாலைகள் நீரில் மூழ்கி, கிராமங்கள் தனிமைப்படுத்தப்படுகின்றன. பல இடங்களில் நீர் வழிகால் அமைப்புகள் இல்லாமை, கால்வாய்கள் சுத்தம் செய்யப்படாமை, மண் நிரபப்பட்ட நீர்த்தேக்கங்கள் போன்ற காரணங்களால் சிறிய மழையும் பெரிய பிரச்சினையாக மாறுகிறது. தலைநகர் கொழும்பும்கூட இதற்கு விதிவிலக்கல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்நிலையிலேயே இம்முறை மழை சாதாரண அளவைக் கடந்து பெய்யும் என்று கூறப்படும் நிலையில், மக்களும் நிர்வாகமும் எவ்வாறு தயாராக உள்ளன என்பதே கவலையாகும்.

ஒவ்வொரு மழைக் காலத்திலும் நிகழ்வது போல, வெள்ளம் வந்த பின்னர் தான் அரச அமைப்புகள் இயக்கத்தில் இறங்கும் நிலை தொடர்கிறது. முன்கூட்டிய ஆய்வு, அபாயப் பகுதிகளின் வரைபடம், அவசர உதவி மையங்கள், மக்கள் இடமாற்றத் திட்டங்கள் ஆகியவை இன்னமும் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. வடக்கு மாகாண சபை நீண்ட காலமாக இயங்காமை, உள்ளூராட்சி அமைப்புகளின் செயல்திறன் குறைபாடு போன்றவையும் இத்தகைய பேரிடர் மேலாண்மையில் தடையாகின்றன.

அதேவேளை, பெரும்பாலான கிராமங்களில் வெள்ளநீர் செல்லும் இயல்பான பாதைகள் வீடுகள் மற்றும் கட்டடங்களால் மறிக்கப்பட்டுள்ளன. சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாததால், நீரின் இயற்கை ஓட்டம் தடைபட்டு வெள்ளம் பெருகும் சூழ்நிலை உருவாகிறது. இது வறட்சிக்காலத்தில் நீர் சேமிப்பைத் தடுக்கவும், மழைக்காலத்தில் வெள்ளத்தைக் கூடுதலாகக் கிளப்பவும் காரணமாகிறது.

### மக்களின் பங்களிப்பு முக்கியம்

பேரிடர் மேலாண்மையில் அரசாங்கத்தின் பங்குடன் மக்களின் பங்களிப்பும் அவசியம். பல இடங்களில் மக்கள் தாமாகவே சாலைகளில் மண்சிறை (sandbag) தடுப்புகள் அமைப்பதோ, சிறிய நீர்வாய்களைத் திறப்பதோ செய்து வருகின்றனர். ஆனால் இது ஒருங்கிணைந்த முறையில் செய்யப்படவில்லை. கிராம அதிகாரிகள், பொது சுகாதார அதிகாரிகள், இராணுவம், காவல் துறை போன்ற அமைப்புகளுடன் மக்கள் இணைந்து செயற்படும்போது மட்டுமே வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தை குறைக்க முடியும்.

மேலும், பள்ளிகள், ஆலயங்கள் போன்ற பொதுத் தளங்களை தற்காலிக தங்குமிடங்களாக மாற்றும் திட்டங்களும் முன்கூட்டியே வகுக்கப்படவேண்டும். குழந்தைகள், மூத்தோர், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கான தனித்தவச ஏற்பாடுகளும் அவசியம்.

வறட்சி, வெள்ளம் – இவை இரண்டும் எதிர்மறை தோற்றமளிப்பினும், இரண்டின் மூலக்காரணமும் நீரைச் சீராகக் கையாளாமையே. மழைக்காலத்தில் கிடைக்கும் அதிக நீரை சேமிக்கும் தொட்டிகள், சிறு அணைகள், நிலத்தடி நீர் நிரப்பும் குளங்கள் போன்றவை சரியாக பராமரிக்கப்படுமானால், வெள்ளத்தைக் குறைத்து வறட்சியையும் சமாளிக்க முடியும். இதற்கான நீண்டகாலத் திட்டங்கள் வடகிழக்கில் இன்றியமையாதவை.

### முன்னேச்சரிக்கையே பாதுகாப்பு

'வெள்ளம் வந்த பிறகு நடவடிக்கை' என்ற பழைய நடைமுறை இப்போது போதாது. வானிலை மாற்றம் நமக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. வரும் மாதங்களில் மழை பெருகும் என நிச்சயம் தெரிந்த நிலையில், அரசு, மாகாண நிர்வாகம், உள்ளூராட்சி அமைப்புகள், மக்கள் என அனைவரும் முன்னேச்சரிக்கையாக செயல்பட வேண்டும்.

வறட்சியின் வேதனைக்குப் பிறகு வெள்ளத்தின் வேதனையை அனுபவிக்க வேண்டாம் என்றால், இன்றே தயாராகவேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் வெள்ளத்தை எதிர்கொள்ளும் திறன் வளர்த்துக் கொள்வதே இன்றைய அவசியம். இயற்கையுடன் வாழ்வதற்கான சமநிலையை நாம் கற்றுக்கொள்ளும் தருணம் இது.

# 'ஐஸ்' போதைப் பொருள் கலந்த நீரை குடித்த இரு நாய்கள் பரிதாபமாக சாவு

அம்பாந்தோட்டை, தங்காலை துறைமுகத்தில் இருந்த ஐஸ் போதைப்பொருள் கலந்த நீரைக் குடித்த ஐந்து நாய்களில் இரண்டு நாய்கள் உயிரிழந்துள்ளன என்று தங்காலை கால்நடை வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்காலை துறைமுகத்தில் கடந்த 14ஆம் திகதி கட லில் மிதந்த 51 பொதிகளில் இருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. பொதிகள் கைப்பற்றப்பட்ட பகுதியில் இருந்த நீரை குடித்த ஐந்து நாய்கள் சுயநினைவின்றி ஒரே இடத்தில் சுற்றித் திரிந்த நிலையில் தங்காலை கால்நடை வைத்தியசாலையின் வைத்தியர்கள் அவற்றுக்குச் சிகிச்சை அளித்து வந்தனர். எவ்வாறிருப்பினும் அவற்றில் இரண்டு நாய்கள் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளன. ஏனைய நாய்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப் பட்டு வருகின்றது என்று தங்காலை கால்நடை வைத்தியசா லையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாதாள உலகக் குழுவினருடன் தொடர்பான அனைவரும் கைதாவர்

இஷாரா செவ்வந்தி உட்பட வெளி நாடுகளில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்தார்.

பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளினால் இஷாரா செவ்வந்தி குழுவினர் மற்றும் கெஹல்பத்தர பத்மே குழுவினர் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இந்தப் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள். இவர்கள் எவரும் தப்ப முடியாது.

சந்தேகநபர்கள் எங்கு மறைந்து இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள். நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் நபர்கள் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். எவருக்கும் மன்னிப்பு கிடையாது.

போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்தும், பாதாள உலகக் குழுவினரிடம் இருந்தும் இந்த நாட்டை மீட்டெடுக்க எமது அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது--என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் இரு சந்தேகநபர்கள் கைது

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்த இரு சந்தேக நபர்கள் தீபாவளித் தினமான நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினர் இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். கைதான சந்தேகநபர்கள் 25 வயது மற்றும் 22 வயதுடையவர்கள் என்பதுடன் சம்மாந்துறை மலையடிக் கிராமம் 3 பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்களிடம் இருந்து 1370 மில்லி கிராம், 385 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் ஒரு தொகை பணம், மூன்று கையடக்கத் தொலை பேசிகள், மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன. அவற்றுடன் சந்தேக நபர்கள் இருவரும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை சம்மாந்தறை நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரே நாளில் 4,631 பேர் கைது

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 12 பேரும், சந்தேகத்தின் பேரில் 648 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 230 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 142 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 15 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 557 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
3 years warranty Windows 11
3 years warranty Windows 11
M365
msi
Lenovo
Windows 11
1 years warranty Windows 11
2 years warranty
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
VISA
Terms & Conditions Apply
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

(ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு டெல்லி ஆதரவுடன் முடிவுகளை எடுக்கிறது என்றும், தற்போது காபூல் அரசு டெல்லியின் மறைமுக போரை நடத்தி வருகிறது எனவும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. தலிபான்களை சமாளிக்க திணறும் பாகிஸ்தான் அரசு, இந்தியா மீது தேவையற்ற குற்றச்சாட்டை சுமத்தி வருகிறது என இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஆப்கானிய தலிபானின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தகி, தனது ஆறு நாள் இந்தியப் பயணத்தின் போது சில மறைமுகமான திட்டங்களை வகுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது)

பனிப் போர் காலத்திலும், அதன் பின்னர் பல தசாப்தங்களாக, தலிபன்களை ஆதரிப்பதை பாகிஸ்தான் தேசிய நலன் சார்ந்த விஷயமாகக் கருதி வந்தது. தற்போது எங்கு தவறு நடந்தது, கடந்த காலத்திலா தற்போதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் இடையே இரண்டாயிரம் கிலோமீட்டருக்கும் அதிக நீளம் கொண்ட எல்லை உள்ளது, இது டுரண்ட் கோடு (Durand Line) என்று அழைக்கப்படுகிறது. இந்த எல்லையில் தொடர்ந்தும் மோதல்கள் நடந்து வருகின்றன.



# ஆப்கான் – பாகிஸ்தான் மோதல்; புதுடில்லியின் மறைமுக போரா ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பல மாதங்களாக இரு நாடுகளின் உறவில் பதற்றம் நிலவி வந்த நிலையில், சமீபத்திய மோதல்களால் இரு நாடுகள் உறவு மேலும் மோசமடைந்திருப்பதை காட்டுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, இந்தியாவுக்காக மறைமுக போரில் ஈடுபடுவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் காவ்ஜா ஆசிப் இந்த குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே ஆப்கானிஸ்தானில் செயல்படும் டிடிபி எனும் தெஹ்ரிக் இ தாலிபான் அமைப்பினருக்கும், பாகிஸ்தான் ராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது.

## இருமுனை போரில் பாகிஸ்தான்:

ஆப்கானிஸ்தானுடன் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பாகிஸ்தான் இருமுனை போருக்கு தயாராக உள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ளார்.

மேலும் எல்லையில் இந்தியா அத்துமீற வாய்ப்பு இருப்பதாக குறிப்பிட்ட கவாஜா, அதற்கு பதில் அளிப்பதற்கான உத்திகளை பாகிஸ்தான் ஏற்கெனவே வகுத்துள்ளதாகவும் கூறினார். எனினும் இதுகுறித்து பொதுவெளியில் விவாதிக்க முடியாது எனவும், எந்தவொரு சூழ்நிலைக்கும் தாங்கள் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக பாகிஸ்தானில் வசிக்கும் ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர்களுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு நடவடிக்கையை தொடங்கியுள்ளதாகவும், சட்டவிரோத குடியேறிகள் வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கடந்த காலங்களில் ஆப்கானிஸ்தானின் அனைத்து ஆட்சியாளர்களும் பாகிஸ்தானில் முன்பு தஞ்சம் புகுந்ததாக குறிப்பிட்ட கவாஜா, ஆனால் அவர்கள் யாரும் பாகிஸ்தானின் உதவியை ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை என்றார். பாகிஸ்தானுக்கு, பயங்கரவாதத்தை தவிர ஆப்கானியர்கள் வேறு எதையும் தரவில்லை என்றும் கவாஜா விமர்சித்தார்.

## ஆப்கான் பாகிஸ்தான் மோதல்:



ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் மோதலில், டிடிபி தலிபான் தலைவர்களை குறி வைத்து பாகிஸ்தான் ராணுவம் போர் விமானங்கள் மூலமாக தாக்குதலை நடத்தியது. எல்லை தாண்டி பாகிஸ்தான் நடத்திய இந்த தாக்குதலால் கோபமடைந்த தாலிபான்கள், பதிலடி கொடுத்தனர். இதில் பாகிஸ்தான் தரப்பில் 58 ராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்தியதால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து சவுதி அரேபியா மற்றும் கட்டார் நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிட்டு மோதலை முடித்து வைக்க முயன்றன. எனினும் நீண்ட நாட்கள் இது நீடிக்கவில்லை. டெல்லி தான் காரணம் என பாகிஸ்தான் தரப்பில் கூறப்பட்டது. ஆனாலும் ஆப்கானிஸ்தானின் கந்தகார் மாகாணத்தில் உள்ள ஸ்பின் போல்டாக் மாவட்டத்தில் இருநாடுகளின் எல்லையில் தற்போது போர் வலுத்துள்ளது.

இதில் பாகிஸ்தான் தாக்குதலில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். அதேபோல் ஆப்கானிஸ்தான் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் மறைமுக போர்?

இத்தகைய சூழலில் மீண்டும் கட்டார, சவுதி அரேபியா அரசுகள் தலிபான்கள் மற்றும் பாகிஸ்தானிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன. இதில் ஓர் குறுகிய உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் தாக்குதலை நிறுத்தினர். இதனால் 48 மணி நேரம் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.

ஆனாலும் இதனையடுத்தும் போர் நிறுத்தம் பேணப்படவில்லை. இதற்கு எல்லாம் டெல்லி தான் காரணம் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் காவ்ஜா ஆசிப் குற்றச்சாட்டு வைத்துள்ளார். இந்தியாவுக்காக மறைமுக போரை ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, ஈடுபடுவதாக பாகிஸ்தான் தொடர்ந்து குற்றம் சாட்டியுள்ளது.

ஆயினும் போர் நிறுத்தம் நீடிக்குமா என்பதில் எனக்கு சந்தேகம் உள்ளது. ஏனெனில், ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு டெல்லி ஆதரவுடன் முடிவுகளை எடுக்கிறது. ஏனென்றால் அண்மையில் தலிபானின் ஆப்கான் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தகி, தனது ஆறு நாள் இந்தியப் பயணத்தின் போது சில மறைமுகமான திட்டங்களை வகுத்துள்ளார் என்று கராச்சி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கான் அமைச்சர் வர்த்தகம் மற்றும் இருதரப்பு உறவுகளை மையப்படுத்தி இந்தியாவுக்கு சென்றதாக கூறினாலும் மறைமுக திட்டங்கள் வகுக்கப்பட்டு இருப்பதாக பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

## பல ஆண்டு மோதல் போக்கு:

கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் பல பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் பதிவாகியுள்ளன. எல்லையில் உள்ள பாகிஸ்தான் சோதனைச் சாவடிகளையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்துவரும் தலிபான்கள் இருநாட்டு எல்லையில் கிளை அமைப்பை தொடங்கி பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது. குறிப்பாக

தெஹ்ரீக் இ தலிபான் (TTP) என்ற அமைப்பு பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவதாக குற்றஞ்சாட்டி வருகிறது.

மேலும், இந்த பயங்கரவாத அமைப்பை அழிப்பதாக கூறி ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் பாகிஸ்தான் விமானப்படை கடந்த சில நாட்களுக்கு முன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்யும் தலிபான்கள் அரசு கண்டனம் தெரிவித்தது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்தது.

## பாகிஸ்தான் - தலிபன் உறவு:

பாகிஸ்தானில் தாக்குதல்களை நடத்திய தெஹ்ரிக்-இ-தலிபன் பாகிஸ்தான் எனப்படும் வீவீணை குழுவுக்கு தலிபன்கள் அடைக்கலம் கொடுப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது. இந்த விவகாரத்தால் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்து வந்தன. ஆகஸ்ட் 2021இல் தலிபன்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையிலான பதற்றம் பல முறை வெடித்துள்ளது.

காபூலை விட்டு அமெரிக்கா வெளியேறிய பின்னர், தலிபன்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததை பாகிஸ்தான் தொடக்கத்தில் வரவேற்றது. இது அதன் மேற்கு எல்லையை உறுதிப்படுத்தும் என பாகிஸ்தான் நம்பியது. மேலும், தலிபனுடன் சித்தாந்த ரீதியாக தொடர்புடைய குழுவான TTPஇன் தாக்குதல்களையும் தாலிபன் கட்டுப்படுத்தும் என பாகிஸ்தான் நம்பியது.

ஆனால் வன்முறையே அதிகரித்தன. எல்லை தாண்டி வீவீணை நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான தங்கள் ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் கூறுகிறது. ஆனால், இதை மறுக்கும் ஆப்கானிஸ்தான் அரசு, பாகிஸ்தானின் இந்த குற்றச்சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்கிறது.

மேலும் டுரண்ட் கோட்டில் (Durand Line) வேலி அமைப்பது தொடர்பாகவும் சமீபத்திய ஆண்டுகளில் இருதரப்பும் மோதிக்கொண்டன. ச்சமன், குர்ரம் மற்றும் பாஜோர் போன்ற பகுதிகளில் எல்லை தாண்டிய பல தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் முக்கிய வர்த்தக பாதைகளை பல சந்தர்ப்பங்களில் மூட வேண்டியிருந்தது.

## நீண்டகால பதற்றம்:

இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கையின்மை, பொருளாதார பதற்றங்கள் ஆகியவை ஒரு காலத்தில் வெளியுலகுக்கு தெரியாமல் இருந்தன. தற்போது இந்த மோதல் வெளிப்படையான விரோதமாக மாற்றியுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தும் வீவீணைக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுக்க ஆப்கான் ஆட்சி மறுப்பதால் பாகிஸ்தானுக்கு குறைந்த தேர்வுகளே உள்ளன. தலிபன்களிடம் செல்வாக்கு கொண்டிருக்கும் சீனா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளிடமிருந்து பாகிஸ்தான் உதவியை நாடியுள்ளது. அதன் மூலம் வீவீணைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பாகிஸ்தான் ராணுவத்தை நேரடியாக எதிர்த்துப்போராடும்திறன்தலிபன்களுக்குஇல்லை.மேலும் பாகிஸ்தானும் சவுதி அரேபியாவும் சமீபத்தில் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் எதிரான எந்தவொரு தாக்குதலும் இரு நாடுகள் மீதான தாக்குதலாகவே கருதப்படும் என கூறுகிறது. எனவே இந்தப் போரில் ஆப்கான் நிலமை மோசமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.10.2025இல் வெளியிடப்பெற்றது